தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலையில் தூய்மைப்பணி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப் பணித் திட்டத்தின் சார்பில் “தூய்மையான பாரதம்” நிகழ்ச்சி அக்டோபர் 2, 2014 அன்று பல்கலை வளாகத்தில் துவங்கப்பட்டது.

துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி அவர்கள் நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். முனைவர். ச. மகிமைராஜா, முதன்மையர் (வேளாண்மை) அவர்கள் உறுதிமொழி வாசித்தார். முனைவர். சி. திவாகர் துரைராஜ், முதன்மையர் பொறியியல் அவர்கள் பங்கேற்றார். 50 நாட்டு நலப்பணி திட்ட மாணவ மாணவியர் தூய்மைபணியில் பங்கேற்றனர். பல்கலை வளாகத்தை தூய்மையாக வைப்பதன் அவசியம் மற்றும் உழைப்பின் மதிப்பு ஆகியவற்றை மாணவர்கள் உணர்ந்து கொண்டனர். பிரதம மந்திரியால் துவங்கப்பட்ட இந்த நிகழ்ச்சி 2019ல் மகாத்மாவின் 150 வது பிறந்த தினத்தில் அவருக்கு நாம் செலுத்தும் மரியாதையாக சுத்தமான இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதை மாணவர்கள் உணர்ந்தனர்.

இந்தியாவில் ஒரு நாளில் 5000 குழந்தைகள் சுகாதாரக் குறைவினால் ஏற்படும் நோய்களால் இறப்பதாக குழந்தைகள் நல அமைப்பு தெரிவிக்கிறது. தமிழ்நாட்டின் மனித வளர்ச்சிக் குறியீடு 2000ம் ஆண்டில் 0.465 லிருந்து 2012 ம் ஆண்டில் 0.661 ஆக உயர்ந்துள்ளது. இது கல்வி, வருமானம் ஆகியவற்றில் ஏற்பட்ட உயர்வால் சாத்தியமானது சுகாதாரம் மற்றும் உடல் நலத்தில் மேலும் வளர்ச்சி காண வேண்டும் என்று சுத்தமான கிராமம் போன்ற திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் மத்திய மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களை மக்கள் பங்களிப்பு மூலம் தான் சிறப்புப் பெறும். குறிப்பாக நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள் தாங்கள் தத்தெடுத்த கிராமங்களில் இச்செயலை தொடர்ந்து செய்ய உறுதி ஏற்றனர். அவர்கள் வருடத்திற்கு 100 மணி நேரம் சுத்தத்திற்கு அர்ப்பணிப்பதன் மூலம் வீடு, மாநிலம் மற்றும் நாடு வளம் பெறும்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை திட்ட ஒருங்கிணைப்பாளர் க. குமுதா அவர்கள் செய்தார். திட்ட அலுவலர்கள் இரா. பாவேந்தன், மு.ரா. லதா, கே. ஹேமாபிரபா, ஜி. குரு, எஸ். வரதராஜ் மற்றும் முனைவர். வள்ளியம்மை பங்கேற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்